திரு. பி. ஆர். தாமஸ் : முகவை மாவட்டத்தில், சாத்தூர் வட்டாரத்தில் ஆசிரியர்கள் பணிக்கு வராத முன்பு, திருவிழாவிற்காக விடுமுறை அளித்திருக்கிறார்கள். அந்த விடுமுறையைத் தொடர்ந்து பணிக்கு வராதவர்களுக்கு, விடுமுறைக் காலத்தையும் சேர்த்துக்கொண்டு ஊதியம் அளிக்காமல் இருந்திருக்கிறார்கள். ஆகவே, அந்த விடுமுறைக் காலத்தைக் கணக்கில் எடுத்துக் கொண்டு சம்பளம் கொடுக்க அரசு முன்வருமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இதைப்பற்றித் தனியாகக் கவனத்திற்குக் கொண்டு வந்தால், நடவடிக்கை எடுக்கலாம்.

Rules relating to take over of Municipal Schools.

* 86. *Q.*—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state:

(*a*) whether it is a fact that due to the delay in the framing of the rules relating to the take over of the Municipal Schools, the teachers are put to much hardship in receiving their salaries, getting due increments, depositing Provident Fund contributions, getting loans from Provident Fund accounts, etc.; and

(*b*) if so, the action taken thereon?

நகராட்சிப் பள்ளிகளை அரசு எடுத்துக்கொள்வது

சம்பந்தமான விதிகள்

திரு. பி. ஆர். தாமஸ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) நகராட்சிப் பள்ளிகளை அரசு எடுத்துக்கொள்வது சம்பந்தமான விதிகளைச் செய்வதிலுள்ள கால தாமதத்தினால், ஆசிரியர்கள், தங்களது சம்பளம், ஊதிய உயர்வு ஆகியவற்றைப் பெறுதல், வருங்கால வைப்பு நிதிக்குத் தொகை செலுத்துதல், அதனின்று கடன் பெறுதல் முதலியவற்றில் மிகுந்த இடர்பாடுகளுக்குள்ளாகிறார்கள் என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. பி. ஆர். தாமஸ் : துணைத் தலைவரவர்களே, விதிமுறைகள் வகுக்கப் படுவதற்கு முன்னரே, சில நகராட்சிப் பள்ளிகளின் தலைமை ஆசிரியர் பதவிகள் நகராட்சிப் பள்ளி ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படாமல், 'ஏ' பிரிவு

ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. எனவே, இதைத் தவிர்த்து, நகராட்சிப் பள்ளிகளில் ஏற்கெனவே பணி புரிகின்ற ஆசிரியர்களுக்கு அந்தப் பதவி அளிக்கப்படுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: துணைத் தலைவரவர்களே, இந்தக் கேள்வியிலே,

"The teachers are put to much hardship in receiving their salary, getting due increment, depositing provident fund contribution, getting loans from the provident fund"

என்று கேட்கப்பட்டிருக்கிறது. அதற்குத்தான் இல்லையென்று குறிப்பிட்டேன். தலைமையாசிரியர்களை மாற்றுவது போன்ற மற்றைய நிலைமைகளைப் பொறுத்தவரையில், தனிக் கேள்வி போட்டால்தான், பதில் சொல்ல முடியும்.

திரு. கே. எஸ். கணபதி: 1-4-1970 முதற்கொண்டு முன்னுள் கழகப் பள்ளிகளை அரசாங்கம் எடுத்துக்கொண்டது. ஆனால் அங்கு பணியாற்றும் ஆசிரியர்களுக்கான விதி முறைகள் இதுவரை சரியாக வகுக்கப்படவில்லை. அதற்கான நடவடிக்கை அரசு எடுக்குமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அதுபற்றிய விவரக் குறிப்புகள் இல்லை.

திரு. செ. முத்துசாமி: நகராட்சிப் பள்ளிகளை இப்போது அரசாங்கம் எடுத்துக்கொண்டிருந்தாலும், அந்தப் பள்ளிகளில் பணி புரியும் ஆசிரியர்களை எந்த அடிப்படையில் வைப்பதென்பதில் இன்னும் முடிவெடுக்கவில்லை. ஆனால் தலைமை ஆசிரியர்கள் பதவியை மட்டும் 'ஏ' பிரிவில் இருப்பவர்களுக்குக் கொடுப்பதென்று முடிவெடுத்திருக்கிறார்கள். அந்தப் பள்ளி ஆசிரியர்களின் சீனியாரிட்டியை எப்படி வைப்பதென்பதில் முடிவு காணாத நேரத்தில், அங்கு இருப்பவர்களுக்குப் பதவி உயர்வு கொடுக்காமல், 'ஏ' பிரிவில் உள்ளவர்களுக்கு பதவி உயர்வு கொடுத்ததன் காரணமென்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: நகராட்சிப் பள்ளிகளை அரசுப் பள்ளிகளாக ஏற்றுக்கொண்டிருந்தாலும், அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட சம்பளம் கொடுக்கப்பட்டு வருகிறதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவற்றை அரசாங்கப் பள்ளிகளாக எடுத்துக்கொள்வதற்கான சில பல விதிமுறைகளை வகுத்துச் சேர்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அதுவரையில் அவர்கள், நகராட்சிப் பள்ளியில் எந்தவித சட்டதிட்டத்தில் பணியாற்றினார்களோ, அதே விதிப்படி நடத்தப்படுவார்கள். அந்த விதி

முறைப்படி விடுமுறை போன்றவை தொடர்ந்து அவர்களுக்குத் தரவேண்டுமென்று மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் அரசாங்கத்தோடு இணையும் நிலைமையில்தான் எல்லாச் சலுகைகளையும் தரும் நிலைமைகள் ஏற்படும். நகராட்சிப் பள்ளிகளில் பணி புரியும் போது என்னென்ன உரிமைகளை அவர்கள் பெற்று வந்தார்களோ அவைகள் தொடர்ந்து அவர்களுக்கு அளிக்கப்படும். இப்போது 'ஏ' பிரிவு, 'பி' பிரிவு என்று இருப்பதுபோன்று, 'சி,' பிரிவு ஒன்றை ஏற்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டால், இந்த ஆசிரியர்களை மற்றவர்களுடன் சேர்க்கும்போது, சங்கடங்கள் ஏற்படும். எனவே, தொடர்ந்து இந்தப் பள்ளிகளை நடத்த நகராட்சிகளுக்கு மானியம் கொடுக்கலாமென்று சொல்லியிருக்கிறேன். இப்போது நாம் 66 சத விகிதம்; அவர்கள் 33 சத விகிதம் கொடுக்க வேண்டுமென்று இருப்பதால்தான் சங்கடங்கள் ஏற்படுகின்றன. தனியார் பள்ளிகளுக்கு நாம் 100 சத விகிதம் மானியம் தருகிறோம். எனவே இவர்களுக்குக் கொடுக்கப்படும் மானியத்தின் சதவிகிதத்தை உயர்த்திக் கொடுத்து, அவர்களே பள்ளிகளை நடத்த வேண்டுமென்று சொன்னால் அது பற்றிய தலைவலி இல்லாமல் இருக்கும். அதைப்பற்றியும் ஆராயும்படி செயலாளர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார். அதுகுறித்து முடிவு எடுத்த பின்பு இவர்கள் நிலை சீர்படுத்தப்படும்.

(பிற்பகல் 4-20)

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இது காலம் நீட்டிக்கப்படுமானால், நகராட்சிப் பள்ளிகளில் தலைமையாசிரியராக இருந்தவர் அந்தப் பதவியைப் பெறாமல் போகக்கூடிய நிலை இருக்கிறது. ஏ-பிரிவிலிருந்து வருகிறவர்களுக்குக் கிடைக்கிறது. அந்த இடைக் காலத்திலே அவர்களுடைய சர்வீஸ் மற்றவைகள் எல்லாம் எப்படிக கருதப்படும் என்று அறிந்துகொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: 'ஏ' பிரிவிலிருந்து கொண்டுவந்து போடுகின்றார்களா என்று தெரியவில்லை. அப்படி இருந்தால், அது பற்றித் தனியாக ஆராயலாம்.

திரு. எல். பலராமன்: இந்த மாநகராட்சிப் பள்ளிகளையும், பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளையும் அரசு ஏற்றுக்கொள்ளவில்லை என்றாலும், அவற்றுக்கென்று தனியாக ஒரு வாரியம் அமைத்து, அவற்றை இயக்க அரசிடம் ஒரு செயற்குறிப்பு இருப்பதாக செய்தித் தாள்களில் பார்த்தேன். அது உண்மையா? அதுபற்றி எடுத்த முடிவு என்ன என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அவைகளுக்கென்று தனியாக ஒரு வாரியம் வைக்கின்ற சூழ்நிலை ஏற்படவில்லை. இவைகளை அரசாங்கப் பள்ளிகளுடன் இணைப்பதா அல்லது தனியாகவே வைத்து நடத்துவதா என்பதுபற்றித் தனியாக ஆராயப்படும்.

திரு. சி. வி. ராஜகோபால் : நகராட்சிப் பள்ளிகளில் வேலை செய்கின்ற ஆசிரியர்கள் ஒழுங்காக வேலைக்குப் போகாமல் வேறு வேலை பார்க்கிறார்கள். அப்படிச் செய்கின்ற ஆசிரியர்களை நம்முடைய அரசு கண்காணித்து ஒழுங்காக அவர்கள் வேலைக்குப் போவதற்கு ஏற்பாடு செய்யுமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஒழுங்காக வேலை செய்ய வில்லை என்று ஆசிரியர்கள் அத்தனை பேரையும் ஒட்டு மொத்தமாகக் குற்றம் சாட்ட முடியாது. அப்படிப்பட்ட குறைபாடுகள் எந்தப் பள்ளியில் என்று சொல்ல முடியாது. எந்தப் பள்ளியில் இருந்தாலும், அதற்கான நடவடிக்கை களை அந்தந்தப் பள்ளியை நிர்வகிப்பவர்கள் எடுத்துக்கொள்ள வேண்டியவர் களாக இருக்கிறார்கள்.

Gastro-Enteritis.

*87. *Q.*—THIRU D. V. D' MONTE : Will the Hon. the Minister for Health be pleased to state :

(*a*) whether the Government are aware of the alarming increase in the incidence of gastro-enteritis among children in Madras City;

(*b*) whether the Government have identified the causes behind the sudden increase in this sickness; and

(*c*) the steps taken to remove them?

வயிறு-குடல் சார்ந்த நோய்

திரு. டி. வி. டி'மாண்டி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) சென்னை மாநகரில் உள்ள குழந்தைகளிடையே வயிறு-குடல் சார்ந்த நோய் (பேதி) அச்சமிகும் அளவில் பரவியுள்ளதை அரசு அறியுமா ?

(இ) இந்த நோய் திடீரெனப் பெருகியுள்ளதற்கான காரணங்களை அரசு கண்டறிந்ததா ?